**வணிக வழக்குக்கான சார்பு  நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 56 Of 2025

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27- வது நாள் வியாழக்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. வடமலை முத்து ராமகிருஷ்ணன் | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | திரு. வடமலை முத்து | வேலை: | உரிமையாளர், M/s. மெக்ரம் ஆட்டோமேஷன். |
| வயது | 36 | செல்போன் எண் | |

பி.வா.சா.1 **திரு. வடமலை முத்து ராமகிருஷ்ணன்** ஆக 27.11.2025 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள்

உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிருபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 09.01.2024 – 29.07.2023 பிரதிவாதி வாதிக்கு வங்கியின் மூலம் தொகை செலுத்திய (RTGS, NEFT) வங்கி கணக்கு அறிக்கை - **Ex.B1** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நீங்கள் தான் M/s. மெக்ரம் ஆட்டோமேஷன் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் என்பதை ஊர்ஜிதம் செய்ய நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரகளா என்றால் இல்லை. வாதி நிறுவனத்திற்கும் உங்களுக்கும் வர்த்தக ரீதியான தொடர்பு உள்ளது என்றால் ஆமாம் சுமார் 4 1/2 வருடங்கள் தொடர்பில் இருந்தாம், 2023-2024 வரை வர்த்தகம் வைத்திருந்தோம். உங்கள் நிறுவனத்திற்கு GST எண், PAN எண் உள்ளதா என்றால் இருக்கிறது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீரகளா என்றால் இல்லை. 08.08.2023 தேதியிட்ட வா.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ள GST எண் உங்களுடையதா என்றால் ஆமாம். உங்களது நிறுவனத்திற்கு எந்த எந்த வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் இந்தியன் வங்கி, சுந்தராபுரம் கிளையில் கணக்கு உள்ளது. வாதி நிறுவனத்திடம் வாங்கும் பொருட்களுக்கு நீங்கள் வங்கி பரிவர்த்தனை (RTGS, NEFT) மூலமாகவும் காசோலை மூலமாகவும் பணம் செலுத்துவது உண்டு என்றால் RTGS, NEFT மூலமாக மட்டும் தான் பரிவர்த்தனை இருந்தது. காசோலை கொடுக்கும் வழக்கம் இல்லை. உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் கண்டுள்ள அட்டவணையில் 07.07.2023 தேதியில் காசோலை மூலமாக தான் ரூபாய்.10,290/- செலுத்தப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் கண்டுள்ள அட்டவணையில் 07.07.2023 அன்று காசோலை மூலமாக தான் ரூபாய்.10,290/- வாதிக்கு செலுத்தப்பட்டதால் தான் அட்டவணையில் Mode of Payment என்ற இடத்தில் எந்த தகவலும் நிரப்பப்படாமல் காலியாக விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உங்கள் நிறுவனத்தில் எத்தனை நபர்கள் பணிபுரிகிறார்கள் என்றால் 5 பேர் உள்ளனர், தனிப்பட்ட பிரிவு என்று இல்லை கலந்துதான் வேலை செய்கிறோம். அவர்கள் பெயர் முத்து, செல்வக்குமார், ராஜா மற்றும் கிருபாலட்சுமி, தற்சமயம் செல்வக்குமார் பணியில் இல்லை. உங்கள் நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி என்ன என்றால்

Mechramtooling@gmail.Com ஆகும். பிரமாணவாக்குமூலத்தில் அட்டவணையில் கண்டுள்ள 18.07.2023 பணப்பரிவர்த்தனை எப்போது வாங்கப்பட்ட பொருட்களுக்கு ஆனது என்றால் பொருட்கள் வாங்கப்படும் ஒரு வாரத்திற்குள் அதற்குண்டான தொகையை செலுத்துவது வழக்கம். பிரமாணவாக்குமூலத்தில் அட்டவணையில் கண்டுள்ள 18.07.2023 தேதியிட்ட பரிவர்த்தணைக்கு Invoice No/ Bill No.0057 என்றால் சரிதான், அப்படி தான் கண்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் 17.07.2023 தேதியிட்ட Invoice ன் Invoice No.0057 என கண்டுள்ளது என்றால் சரிதான்.

17.07.2023 தேதியிட்ட Invoice No.0057 - **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்பட்டது.

என்னிடம் காட்டப்படும் கடந்த 22.09.2023 தேதியிட்ட காசோலை உங்களுடையதா, அதில் கண்டுள்ள வங்கி கணக்கு எண் உங்களது நிறுவனத்தின் உடையதா, அதில் கண்டுள்ள நிறுவனத்தின் பெயர் உங்கள் நிறுவனத்தின் பெயரா என்றால் காசோலையில் எங்கள் நிறுவனத்தின் பெயர் கண்டுள்ளது, கணக்கு எண் எங்கள் நிறுவனத்தின் கணக்கு எண் ஆகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என் கையெழுத்து அல்ல, காசோலை எங்கள் நிறுவனத்தின் காசோலை அல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 வங்கி கணக்கு பட்டியலில் 2023 வருடத்திய 8 மற்றும் 10 வது மாத பரிவர்த்தனை கண்டுள்ளது, 9 வது மாத பரிவர்த்தணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, நீங்கள் காசோலை கொடுத்து பரிவர்த்தணை செய்தது தெரியவந்து விடும் என்ற காரணத்தினால் தான் 9 வது மாத பரிவர்த்தணை பட்டியல் நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 22.09.2023 தேதியிட்ட காசோலை Dishonour ஆன காரணத்தினால் தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 மின்னஞ்சல் (Series) மூலம் நீங்கள் காலஅவகாசம் கேட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 07.08.2023 தேதியிட்ட Purchase Order (Order No.36/23-24) மூலமாக வாதி நிறுவனத்திற்கு பொருட்கள் வாங்க கோரி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. 07.08.2023 தேதியில் நீங்கள் வாதி நிறுவனத்திடம் இருந்து எந்த பொருளும் வாங்கவில்லை என்றால் வாங்கவில்லை. 07.08.2023 தேதியிட்ட பிரதிவாதி நிறுவனத்தின் Purchase Order ன் அடிப்படையில் வா.சா.ஆ.4 Invoice ஏற்படுத்தப்பட்ட நிலையில், அதன் அடிப்படையில் பெறப்பட்ட பொருட்களில் சிலவற்றை

வா.சா.ஆ.5 Return Invoice மூலம் வாதி நிறுவனத்திற்கு திருப்பப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.5 Return Invoice எங்கள் நிறுவனத்தின் Invoice இல்லை. வா.சா.ஆ.4 Invoice தொகையை தருவதற்கு காலதாமதம் ஆவதாகவும், காலஅவகாசம் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டு நீங்கள் மேற்சொன்ன மின்னஞ்சல் முகவரி Mechramtooling@gmail.Com ல் இருந்து வாதி நிறுவனத்திற்கு வா.சா.ஆ.6 மின்னஞ்சலில் பதில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது நாங்கள் அனுப்பிய மின்னஞ்சல் இல்லை. நீங்கள் கடைசியாக எப்போது வாதியிடம் பொருட்களை வாங்கினீர்கள் என்றால் கடந்த 18.07.2023 தான் எங்கள் கடைசி பரிவர்த்தனை ஆகும். 18.07.2023 வரை நடந்த அனைத்து பரிவர்த்தனைக்கும் வாதிக்கு செலுத்த வேண்டிய அனைத்து தொகையையும் நீங்கள் செலுத்திவிட்டீர்களா என்றால் செலுத்திவிட்டேன். 18.07.2023 தேதிக்கு பிறகு உங்களுக்கும் வாதிக்கும் எந்த வியாபார பரிவர்த்தனையும் ஏற்படவில்லையா என்றால் இல்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 வங்கி கணக்குப்பட்டியலில் 09.01.2024 தேதியில் வாதி நிறுவனத்திற்கு ரூபாய்.31,575.25 IMPS மூலமாக செலுத்தப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 Invoice (Bill no. 0081/08.08.2023) தொகையை முழுமையாக செலுத்தமுடியாமல் போனதால் தான் 09.01.2024 தேதியில் வாதி நிறுவனத்திற்கு ரூபாய்.31,575.25 IMPS மூலமாக செலுத்தப்பட்டும், மேற்படி தொகையை வட்டிக்கு கணக்கு வைத்துக்கொள்ளவும், அசல் Invoice தொகையை செலுத்த காலஅவகாசம் கோரி வா.சா.ஆ.6 மின்னஞ்சல் வாதி நிறுவனத்திற்கு அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரியல்ல, அது எங்களுடைய மின்னஞ்சல் இல்லை, நாங்கள் அனுப்பவில்லை. 18.07.2023 தேதிக்குப் பிறகு உங்களுக்கும் வாதிக்கும் எந்த வியாபார பரிவர்த்தனையும் இல்லை என்று சொல்லி உள்ள நிலையில் நீங்கள் எந்த காரணத்திற்காக 9.01.2024 தேதியில் வாதி நிறுவனத்திற்கு ரூபாய்.31,575.25 IMPS மூலமாக செலுத்தப்பட்டது என குறிப்பிட்டு உங்கள் எதிர் உரையிலோ அல்லது பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, பொருட்களின் தேவைக்காகத்தான் 9.01.2024 தேதியில் பணம் அனுப்பப்பட்டது. உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 10 ல் ரூபாய்.31,575.25 தொகையானது பொருட்கள் வாங்குவதற்காக அனுப்பப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை, அதிகப்படியாக செலுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான், அந்த தொகைக்கு வாதி நிறுவனம் எங்களுக்கு பொருட்கள் சப்ளை செய்யவில்லை. ரூபாய்.31,575.25 தொகையானது வாதி நிறுவனத்திற்கு

அதிகப்படியாக செலுத்தியதாகவும், அதை திருப்பி கேட்டு தனிப்பட்ட Notice ஏதேனும் அனுப்பி உள்ளீர்களா என்றால் இல்லை, பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளது தான். வா.சா.ஆ-4 Invoice தொகையை நீங்கள் வாதி நிறுவனத்திற்கு தரவில்லை என்ற காரணத்தினால் உங்களுக்கு எதிராக சுந்தராபுரம் காவல் நிலையத்தில் வாதி புகார் அளித்தாரா என்றால் கொடுக்கப்பட்டது. புகாரின் அடிப்படையில் காவல் நிலையம் நீங்கள் சென்றீர்களா என்றால் சென்றேன். வழக்கறிஞர் உடன் சென்றீர்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் Caveat தாக்கல் செய்த நகலை காண்பித்ததால் தான் போலீசார் புகாரை விசாரிக்கவில்லை, நீதிமன்றத்தில் பரிகாரத்தை தேடிக்கொள்ள தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான். இருதரப்பினரையும் விசாரிக்கவில்லை நீதிமன்றத்தில் பரிகாரம் கோர அறிவுறுத்தப்பட்டது.

வாதி நிறுவனத்திற்கு எதிராக அளித்த Caveat மனு **வா.சா.ஆ-13** ஆக குறியீடு செய்யப்பட்டது.

தாவா சம்பந்தமாக PIM Notice அனுப்பப்பட்டு நீங்கள் ஆஜராக காரணத்தினால் 09.09.2024 தேதியிட்ட வா.சா.ஆ.11 Non starter அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடந்த 08.08.2023 தேதியிட்ட வா.சா.ஆ.4 Invoice அடிப்படையில் வாதியிடம் இருந்து பொருட்கள் வாங்கி உள்ளீர்கள், வா.சா.ஆ 4 Invoice தொகையை வட்டி உடன் செலுத்த நீங்கள் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2025.11.27 17:58:31 +0530

**Judge,**
**Commercial Court,**
**(Senior Civil Judge Cadre),**
**Coimbatore.**